இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 - முரசு : 81 - ஒலி : 342 - திருவள்ளுவர் ஆண்டு 2054 - ஆடி 06 - சனிக்கிழமை 22 ஜூலை 2023 - மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 342 : Thiruvalluvar Year - 2054 - Aadi 06 - Saturday 22 July 2023 - Madurai 12 Pages ₹ 5.00



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.7.2023) தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் சார்பில் விருதுநகர் மற்றும் குடியாத்தத்தில் 8 கோடியே 94 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடங்கள், தேனியில் 3 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகக் கட்டடம், சேந்தமங்கலம் மற்றும் பள்ளியாடி ஆகிய இடங்களில் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். மேலும், 7 புதிய வணிகவரி நிர்வாக கோட்டங்கள், 6 புதிய வணிகவரி நுண்ணறிவு கோட்டங்கள், 13 புதிய வணிகவரி மாவட்டங்கள் மற்றும் 2 புதிய பதிவு மாவட்டங்கள் ஆகியவற்றை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் தீரஜ் குமார், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், வணிகவரி இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி வே.இரா.சுப்புலெட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.7.2023) தலைமைச் செயலகத்தில், குண்டர் சட்டம் மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் ஆலோசனை குழுத் தலைவர் நீதியரசர் கே.மோகன்ராம், உறுப்பினர்கள் நீதியரசர் ஜி.எம். அக்பர் அலி, நீதியரசர் திருமதி எஸ். ஆனந்தி ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## மணிப்பூர் கொடூரம்:

# அணிவகுக்கும் அதிர்ச்சித் தகவல்கள்!

## அமெரிக்க தூதர் வேதனை! உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கண்டனம்!

**இம்பால், ஜூலை 22-**

**மணிப்பூர் மாநிலத்தில் 'குக்கி' பழங்குடியின மக்களுக்கும், மைத்தேயி சமூகத்தினருக்கும் இடையே மே 3 அன்று தொடங்கிய கலவரம் பெரிய வன்முறையாக மாறி, அக்கொடிய நிலை இன்று வரை நீடிக்கிறது.**

**இந்தக் கலவரத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளார்கள் எனும் நெஞ்சைப் பிளக்கும் செய்தியினுடே, இந்தக் கலவரம் தொடர்பாக நாள்தோறும் பல அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளியாகி, நமது வேதனையை மேலும் அதிகரித்து வருகின்றன.**

**கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான பெண்களில் ஒருவரது கணவர் ஓய்வு பெற்ற இராணுவ வீரர் என நேற்று ஒரு செய்தி வெளியாகியுள்ளது.**

**இந்த மனிதப் படுகொலைகளுக்கும் கூட்டுப் பாலியல் வன்முறைகளுக்கும் ஒன்றிய - மாநில பா.ஜ.க. அரசுகளே காரணம் என்றும், கலவரத்தை தடுத்து நிறுத்தத் தெரியாத கையாலாகாத்தனத்தை உச்சநீதி மன்றத்தின் தலைமை நீதிபதியும், அமெரிக்கத் தூதர் போன்றோரும் கூட தங்களின் கடும் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள்.**

அது பற்றிய விவரம் வருமாறு:-

மணிப்பூரில் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான பெண்களில் ஒருவரது கணவர், ஓய்வுபெற்ற ராணுவ வீரர் என்பது தெரிய வந்துள்ளது.

எல்லையில் நாட்டைப் பாதுகாத்த தன்னால், தனது மனைவியையும், சக மக்களையும் பாதுகாக்க முடியாமல் போனதாக அவர் வேதனை தெரிவித்துள்ளார்.

மே 4 ஆம் தேதி நிகழ்ந்த சம்பவம் மட்டுமல்லாது, இதுவரை 50க்கும் மேற்பட்ட பழங்குடியினப் பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக புகார் எழுந்துள்ளது.

மணிப்பூர் மாநிலத்தில் குக்கி பழங்குடியினருக்கும், மைத்தேயி சமூகத்தினருக்கும் இடையே இடஒதுக்கீடு தொடர்பான மோதல் பயங்கர வன்முறையாக வெடித்தது. கடந்த மே மாதம் 3 ஆம் தேதி தொடங்கிய வன்முறையில் இதுவரை 150க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில், குக்கி பழங்குடியினத்தைச் சேர்ந்த இரண்டு பெண்களை, கும்பல் ஒன்று சேர்ந்து நிர்வாணப்படுத்தி வீதியில் ஊர்வலமாக அழைத்துச் சென்ற கொடூரமான வீடியோ சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு தேசிய அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 2 பெண்களும் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதும் தெரியவந்துள்ளது.

**ஓய்வு பெற்ற ராணுவ வீரர் கண்ணீர்!**

இதில், பாதிக்கப்பட்ட பெண்களில் ஒருவரது கணவர், கார்கில் போரில் பங்கேற்ற ஓய்வுபெற்ற ராணுவ வீரர் என்பது தெரிய வந்துள்ளது. அசாம் ரெஜிமெண்டில் சுபேதாராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தன்னால் நாட்டைக் காக்க முடிந்தது. ஆனால், மணிப்பூரில் தன் மனைவியையும், சக மக்களையும் பாதுகாக்க முடியவில்லை என்று ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளார். தனது மனைவிக்கு நேர்ந்த கொடுமையைத் தடுக்க யாருமே முன்வரவில்லை என்றும் தனது துயரத்தை ஊடகங்கள் மூலமாக பகிர்ந்துள்ளார்.

பழங்குடியினப் பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரத்தில், போலிஸாரே அந்தப் பெண்களை வன்முறைக் கும்பலிடம் பிடித்துக் கொடுத்ததாகவும் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

மே 4 ஆம் தேதி நிகழ்ந்த சம்பவம் மட்டுமல்லாது, இதுவரை 50க்கும் மேற்பட்ட

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## ரூ.14.65 கோடி மதிப்பில் கட்டப்பட்ட

# வணிகவரி - பதிவுத்துறை கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜூலை 22-**

**வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில் ரூ.14.65 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்து, 7 புதிய வணிகவரி நிர்வாக கோட்டங்கள், 6 புதிய வணிகவரி நுண்ணறிவு கோட்டங்கள், 13 புதிய வணிகவரி மாவட்டங்கள் மற்றும் 2 புதிய பதிவு மாவட்டங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.7.2023) தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் சார்பில் விருதுநகர் மற்றும் குடியாத்தத்தில் 8 கோடியே 94 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடங்கள், தேனியில் 3 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகக் கட்டடம், சேந்தமங்கலம் மற்றும் பள்ளியாடி ஆகிய இடங்களில் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

மேலும், 7 புதிய வணிகவரி நிர்வாக கோட்டங்கள், 6 புதிய வணிகவரி நுண்ணறிவு கோட்டங்கள், 13 புதிய வணிகவரி மாவட்டங்கள் மற்றும் 2 புதிய பதிவு மாவட்டங்கள் ஆகியவற்றை தொடங்கி வைத்தார்.

மாநிலத்தின் வரி வருவாயில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் பங்களிக்கும் முக்கிய துறையாக வணிகவரித்துறை விளங்கி வருவதோடு, வரி வசூல் மற்றும் வரி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல் திறனையும் உறுதி செய்து வருகிறது. மேலும், பதிவுத்துறை வாயிலாக மக்கள் தங்கள் சொத்துக்களின் மீதான உரிமையை தமது பெயரில் பதிவு செய்தல், திருமணத்தைப் பதிவு செய்தல், சங்கங்கள், சீட்டுகள் மற்றும் கூட்டாண்மை நிறுவனம் போன்ற குழுவாகக் கூடி செயல்படும் நடவடிக்கைகளைப் பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயல்பாடுகளை மேலும் மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

**விருதுநகர் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தல்**

திருநெல்வேலி மாநில வரிக் கோட்டத்திற்குட்பட்ட விருதுநகர் வணிகவரி அலுவலகங்களுக்கு விருதுநகரில் 6 கோடியே 96 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இக்கட்டடத்தில், தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 1490 சதுர மீட்டர் பரப்பளவில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடமும், 575 சதுர மீட்டர் பரப்பளவில் வணிகவரி அலுவலகக் கட்டடமும் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடங்களில் குடிநீர் வசதி, கழிவறை வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தள நடைபாதை வசதி போன்ற இதர வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும், துறை மறுசீரமைப்பின்படி புதிதாக உருவாக்கப்பட்டுள்ள விருதுநகர் கோட்டத்திற்குட்பட்ட இணை ஆணையர் (மாநில வரி) மற்றும் நுண்ணறிவு அலுவலகங்களுக்குட்பட்ட 86 அலுவலர்கள்/பணியாளர்கள் பணிபுரிவர்.

**குடியாத்தம் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தல்** வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், வேப்பூர் கிராமத்தில், வேலூர் (மாநில வரி) கோட்டத்திற்குட்பட்ட, மாநில வரி அலுவலர், குடியாத்தம் (கிழக்கு) மற்றும் குடியாத்தம் (மேற்கு) அலுவலகங்களுக்கு, குடியாத்தத்தில் 1 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

824 சதுர மீட்டர் பரப்பளவில், தரை மற்றும் இரண்டு தளங்களுடன், குடிநீர் வசதி, கழிவறை வசதி,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

மணிப்பூர் கொடூரம் மக்களவையில் விவாதிக்க வலியுறுத்தல்

## காங்கிரஸ், தி.மு.க. தொடர் முழக்கம்!

### மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைப்பு!

புதுடெல்லி, ஜூலை 22-

மணிப்பூர் கொடூரம் தொடர்பாக விவாதிக்கக்கோரி எதிர்க்கட்சியினர் தொடர் முழக்கம் எழுப்பியதால், மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

மணிப்பூர் கொடூரம் தொடர்பாக மக்களவையில் விவாதம் நடத்தக் கோரி தி.மு.க. சார்பில் கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு, துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் அளித்திருந்தனர்.



இதேபோல், மாநிலங்களவையில் விவாதம் நடத்தக்கோரி தி.மு.க சார்பில் திருச்சி சிவா ஒத்திவைப்பு தீர்மானநோட்டீஸ்அளித்திருந்தார்.

இந்நிலையில், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரின் 2வது நாள் அமர்வு தொடங்கியவுடன், மணிப்பூர் கொடூரம் குறித்து விவாதிக்க வலியுறுத்தி மக்களவையில் காங்கிரஸ், திமுக, திரிணாமுல்காங்கிரஸ்உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் முழக்கங்களை எழுப்பினர்.

ஆனால் இதற்கு அனுமதிமறுத்தசபாநாயகர்ஓம் பிர்லா, அவையை நண்பகல் 12 மணிவரை ஒத்திவைத்தார். அவைமீண்டும் கூடியபோது, பிரதமர் மோடி அவைக்குவந்துபதிலளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் வலியுறுத்தினர். ஆனால், பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பதிலளிப்பார் என்று ஒன்றிய அரசுதரப்பில் அறிவிக்கப்பட்டது.

அதனை ஏற்க மறுத்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மக்களவையில் உடனடியாக விவாதம் நடத்த வேண்டும் என்றும், பிரதமர் அவைக்கு வந்து பதிலளிக்க வேண்டும் என்றும் பதாகைகளைஏந்தியவாறு முழக்கங்கள் எழுப்பிய தால், மக்களவைநாள்முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.